

பாமாலை 451 நீ உயிர் பெறவே

1 நீ உயிர் பெறவே நான் ரத்தம் சிந்தினேன்

நீ மீட்கப்பட நானே விலையாகினேன்

என் ஜீவன் நான் தந்தேன்

நீ என்னத்தை த் தந்தாய்

2 சதா கால இன்பம் நீ பெற்று வாழ்ந்திட

இவ்வுலகில் வந்தேன், துன்பம் சகித்திட

நீடு நாள் பாடுற்றேன்;

ஓர் நாள் நீ தந்தாயோ

3 மகத்வ மாளிகை உனக்காய் நான் விட்டேன்

உலகில் வாதையை உனக்காய் ச் சகித்தேன்

யாவையும் தந்தேனே

நீ எதைக் கொடுத்தாய்?

4 உன் ஜீவன் தத்தஞ் செய் உன் நேச மீட்பர்க்காய்

பூலோக வாழ்வு பொய், ஜீவி நித்யத்திற்காய்

வீண் செல்வம் வெறுத்து

என்னைப் பின்பற்றி வா .